முருகப்பெருமான் துணை

**மகான் கலிகம்ப நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**02.05.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. சங்கடம் போக்க வந்த
   சற்குருவே அரங்கா வாழ்க
   சங்கமம் உன்வழி மக்கள்பெற
   சகலரும் ஞானவான்கள் ஆவர் எனக்கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
   குறைவிலா பிலவ தகர் திங்கள்
   தெரிவிப்பேன் மூவாறோர் திகதி கதிர்வாரம்
   (பிலவ வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2021 ஞாயிற்றுக்கிழமை)
   தேசிகனும் கேட்க கலிக்கம்ப நாயனார் யானும்
3. யானும் உலகநலம் காண உரைப்பேன்
   உண்மை வழிகாட்டும் தேசிகன்
   ஞானமே கலியின் பாதுகாப்பு
   ஞாலமதில் சன்மார்க்க நெறியை
4. நெறியை எவர் பின்பற்றி
   நிலமதனில் தருமம் செய்கிறாரோ
   வறுமை அவர்கட்கு விலகும்
   வள்ளல் தன்மை அவர்களுள் வளரும்
5. வளரவே தேட்டு தனவளர்ச்சி
   வளமான பொருளாதார பலமுடன்
   தளரா மேலவர் தொடர்பு
   தயவான தாரபலம் கூடி
6. கூடியே ஞான சேய்களாய்
   குடியில் தவழ்ந்து ஞானவாழ்வு
   கூடியே அவர்கள் வம்சம்
   குறைவிலா தழைத்து ஓங்கி
7. ஓங்கியே உயர்ஞானமாகி
   ஓங்காரன் அவதார சூட்சுமம்
   ஓங்காரமாக எங்கும் பரவி
   உலகமே இந்த அற்புதம் கூடி
8. கூடியே ஞானவான்கள் எனும்
   கூட்டம் பெருகி கலியினில்
   ஓடுமே தீவினைகள் எல்லாம்
   ஓங்கார சக்தி பரவபரவ
9. பரவவே நல்வினை கூடியே
   பரோபகாரமும் தருமச்செயலும்
   தரணி எங்கும் நிரம்பியே
   தக்க மாற்றம் தேற்றம் காணும்

10. காணுகின்ற இந்த மாற்றத்தை
கலியில் நடத்தி முடித்திட
ஞான பண்டிதன் சூட்சுமமாக வந்த
ஞான தேசிகனை மக்கள் தேடிவர

11. வருகவே வையகம் மாறும்
வந்துள்ள சகல இடரும் அகலும்
முருகக் கடவுள் வழிபாட்டால் மாறும்
மொழிந்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–